# கவிதைக்காரன் நான்



தொகுப்பு : சாள்ஸ் அன்டனி

வெளியீடு: ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு

# கவிதைக்காரன் நான்


நூலாசிரியர் : சாள்ஸ் அன்டனி

மின்னஞ்சல் : charlesantan@gmail.com

முதற் பதிப்பு– 2022

பக்கவடிவமைப்பு–ஜே.எம்.பாஸித்

பக்கங்கள் : 47

விலை : இலவசம்

வெளியீடு: ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு

**Kavithaikkaran naan (Collection of poems)**

**Author :- Sithamparanathan Chales Antony**

**E-mail:** charlesantan@gmail.com

**First Edition – 2021**

**Book Designed by –J.M.Basith**

**Published by – Sky Tamil Media Network**

**Download this book**
www.skymediasl.com

வெளியீடு:

ISBN – 978-624-98348-0-4

9 786249 834804



All rights reserved. no part of this publication may be reproduced, stored in retrieval system, or transmitted in any form of by any means - electronic, mechanical, photocopying, recording or otherwise - without the prior permission of the author.

# அணிந்துரை



கவியின னின்பாற் கவிகளுந் தோன்றப்
புவிபெறு மென்றும் புகழ்.

என்பதற்கிணங்கச் சிறந்த வகையில் புதுக்கவிதைகளைப் படைத்து வரும் இளவலான நற்கவிஞன் தான் கிளிநொச்சியின் புகழ்பூத்த வலைப்பாடு எனும் நெய்தல் நிலத்தைச் சேர்ந்த சாள்ஸ் அன்ரனி ஆவான். இவன் ஒரு துடிப்பும் துறுதுறு எண்ணமுங் கொண்டவனாக நவீன பாங்கைக் கையாண்டு கவிவடிப்பதில் கைதேர்ந்தவன். தனது கவிதையில் ஏதோ ஒரு பொருண்மையை அசால்டாக விதைத்துப் பாமரரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் இலகுநடை ததும்பக் கவிதை வடிப்பதில் இவனுக்கு நிகர் இவனேயாவான்.

இவன் பெரும்பாலும் அகத்திணை சுட்டுகின்ற காதலைப் பொருளாகக் கொண்ட கவிதைகளோடு, வாழ்வியல் அம்சங்களைத் தத்ரூபமாகச் சித்தரிக்கும் கவிதைகளையும் எழுதுவதாலேயே இவனது கவிதைகள் அநேகரது கவனத்தை ஈர்த்து விடுகின்றது. புதுக்கவிதை எழுதுதற்கு வரையறை இல்லை எனும் எண்ணத்தை மனதில் நிறுத்தி எதுகை மோனை சந்தம் அணிநயம் தாண்டித் தான் சொல்லவரும் கருத்தை மட்டும் சிறப்பாகப் புலப்படுத்தி ரசிகர்களிற்கு கவியால் விருந்தளித்து விடுவான்.

இவனின் படைப்புகள் சுருங்கியதாய் விரிந்த கருத்தைப் புலப்படுத்துவதால் என்னையும் இலகுவில் ஈர்த்து விடுவது தவிர்க்க முடியாததொன்றே!. இவனது கவிதைக்காரன் நான் எனும் பக்கத்தில் சுவைமிகுந்த கவிதைகளை ரசித்துப் படிக்க முடியும். அந்தவகையில், "அப்பா, கற்பு, தனிமை, புகைப்படம் மற்றும் திசைமாறும் உருவங்கள்." போன்றவை என்னை மிகவும் கவர்ந்த கவிதைகளாகும். ஆகவே! இப்படியான ஓர் நற்கவிஞனும், அருமைத் தம்பியுமாகிய இவன் இந்நூல் போல இன்னும் நூல்களை வெளியிட்டுப் பற்பல பட்டமும் புகழும் பெற்று மென்மேலும் சிகரந்தொட அண்ணனின் இதயங் கனிந்த நல்வாழ்த்துகள் உரித்தாகுக.
வாழ்க! வளத்துடன்.

**பைந்தமிழ்ச் செம்மல்**
**வீரா மோகன்.**

# என்னுரை



புதுக்கவிஞனாகிய நான் நெய்தல் வீரர்கள் நிறைந்த வலைநகர் மண்ணின் மைந்தனாவேன். நான் மழலையாக என் மண்ணை விட்டு பிரிந்து அகதியாக அயல் தேசம் சென்றவன். பல இன்னல்களைக் கடந்து கல்வி பயின்றேன். உறவுகள் இல்லாத தேசத்தில் ஊமையாக வாழ்ந்தேன். இருபது கடந்தேன் உழைத்திடத் துணிந்தேன். அன்னையின் ஆசை எது என்று கேட்கத் தயக்கத்துடன் மீண்டும் அன்னையையும், தன்தாய் மண்ணையும் முத்தமிட்டு மூச்சுக் காற்றைச் சுவாசிக்க ஆசை என்று சொல்லி அழுதிட மழலை நட்பினையும் இளமை அன்பினையும் இழந்து என் மண்ணை வந்தடைந்தேன்.

அன்பையும் நட்பையும் பிரிந்து ஆறுதல் இல்லாத என் வாழ்க்கையில் நல்ல நட்பையும் உண்மை அன்பையும் தேடிய பயணங்களில் கிடைத்த அனுபவங்கள் என் கண்ணில் கண்ட காட்சிகள் மனதில் இருக்கும் எண்ணங்களையுமே நான் இங்கு கவிதையாக எழுதுகிறேன்.
சிறுவயதிலிருந்த என் எழுத்தாசையை வரிகளாக்கி என் கவிக்குழந்தைகளை உங்கள் முன் தவழவிடுகின்றேன்.
இவற்றை உங்கள் குழந்தைகளாய் ஏற்றுக் கைகொடுத்து நடைபழக்கி உலாவச் செய்து ஊக்குவிப்பது உங்கள் கையிலேயே உள்ளது. என் கவிகளைப் படைப்பாக்க உதவிய உள்ளங்களுக்கும்,
ஊக்குவித்த உறவுகளுக்கும் அன்புடன் நன்றி பல.

**என்றும் அன்புடன்.**
**கவிதைக்காரன்.**
**சாள்ஸ் அன்டனி.**
**வலைப்பாடு**

# பொருளடக்கம்

1,நாணம் கொண்டேன்
2,கறுப்பழகியே நீ
3,அழகென்ற ஆணவம் வேண்டாம் பெண்ணே
4,செருப்பும் பொறுப்பும்
5,கண்ணீர் பூ
6,மனதின் மீள் பதிவேற்றம்
7,மூடிய புத்தகத்தின் பயம்
8,அமைதியான புத்தகம்
9,தனிமை வேண்டாம்
10,தபால்பெட்டி கடிதமும் மனிதனின் மனமும்
11,என் கற்பனை காரிகை அவள்
12,திருமணம்
13,தொலைபேசி
14,புகைப்படம்
15,கடிகாரமும் நானும்
16,நீயும் நானும் நடந்திடவே
17,மைவிழியே
18,சுவாசிக்க தவிக்காதே
19,இராவணன் காதல்
20,ஆயுள் கைதியை தேடும் கண்கள்
21,மீண்டும் கண்கள் பாலைவனமாகிட வேண்டும்
22,நிழலும் உதவிடும்
23,காத்திருப்பவர்கள் இகழ்ந்திடுவார்கள் புகழ்ந்திடுவார்கள்
24,விஞ்ஞான காதல்
25,இறுதி மு(யு)த்தம்
26,ஏழை கொப்பி
27,கற்பு
28,உறவு வேர்கள்
29,நடுங்கி துடிக்கும் இருதயம்
30,மயங்கியே மாய்கின்றேன்
31,நீயும் நானும்
32,என் அன்பு பனித்துளியே
33,ஆசை பயணம்
34,வாழ்க்கை கனவு
35,குடிசையும் கோபுரமும்
36,கரைந்து போகின்றேன் நான்
37,மௌன மொழியே
38,என் அருகில் நீ இருந்தால்
39,இயற்கையின் ஏமாற்றம் அழகு
40,மண்ணில் விழுந்த பூ
41,யார் அவளோ?

01

# நாணம் கொண்டேன்



கற்கால கதைகளில் வாழ்ந்த கற்பனை
கறுப்பழகு சிற்பங்களின் ஒன்று
உயிர்த்தெழுந்து வந்ததேனோ..

கருநிற ஆடை அணிந்து வந்து
கருவிழி மைதிரட்டி கண் அசைத்து
கதைத்ததேனோ...

அசைந்திடும் அவள் மைவிழிகளில்
ஒன்றை மட்டும் அந்த கார்மேகத்தின்
நாணல்களினால் வளைத்து வைத்த
அவள் கூந்தல் வந்து மேகம்போல்
அதை மூடுவதேனோ...

மூடிடும் அவள் கூந்தல்தனை
ஒதுக்கியே அவள் என்னை
பார்த்தபோது நாணத்தினால் நான்
இன்று தவித்ததேனோ...

# கறுப்பழகியே நீ

கண் இரண்டின் கருவிழியால்
ஊடறுத்தாய் என் இதயத்தை..

கருநிற சாயம் பூசியே உன் இமை
வளைத்தே என்னை வளைத்தாயடி
நீ..

உந்தன் கருங்கூந்தலின் ஒற்றை முடி
நீளமதில் என்னை நீ
நிலைகுலைத்தே போனாயடி...

உன் கருநிற தேகம் மூடிய ஒற்றை
ஆடை போதுமடி நான் ஓர் ஜென்மம்
வாழ்ந்திட கூடுமடி...





# அழகென்ற ஆணவம் வேண்டாம் பெண்ணே..

உன் அறிவின் எல்லையை அழகெனும்
ஆணவம் மறைத்துவிடும்...

உன் பெண்மையின் மென்மையை
அழகெனும் ஆணவம் அழித்துவிடும்...

உன் ஆடைகளின் நாகரிகத்தை
அழகெனும் ஆணவம் மாற்றிவிடும்....

உன் உடலை காட்சி பொருளாக இந்த
உலகிற்கு அழகெனும் ஆணவம்
படைத்துவிடும்....

பெண்ணே உன் அழகெனும் ஆணவத்தால்
நீ அழிந்துவிடாதே.! நீயும் ஒரு சாதரண
பெண்ணாக இந்த உலகத்தில்
சத்தமில்லாமல் சாதனைகள் பல
செய்துவிடு...

ஏனேனில் உன் அழகெனும் ஆணவத்தை
உயர்த்திட நினைக்கும் ஊடகங்கள்
நிறைந்த உலகம் இது.....



# செருப்பும் பொறுப்பும்

உன்னை யாரும் செருப்பாக
மதித்தால் கவலையே வேண்டாம்
ஏனெனில்...

செல்லும் இடமெல்லாம் தன்
கடமையை செய்திடும் செருப்புக்கு
தான் இங்கு பொறுப்பும் பொறுமையும்
அதிகம்...

கல்லும் முள்ளும் காயங்கள்
தந்திடாமல் செல்லும் இடமெல்லாம்
ஏழை பணக்காரன் என்று பாராமல்
சேவையை செய்துவிட்டு வாசலிலே
காத்திருக்கும்...

காலம் தோறும் பாதுகாத்தாலும்
மூளையின் பேச்சைக் கேட்டு
தன்னைவிட்டுச் செல்லும் கால்களை
அது காயப்படுத்துவதில்லை...

தன்னுடன் இருந்தவன் தவறியதால்
சுயநலமில்லாமல் தன்னையும்
மாய்த்துக்கொள்ளும் செருப்புக்குதான்
இந்த உலகில் பொறுப்பும் அதிகம்
பொறுமையும் அதிகம்....



# கண்ணீர் பூ

எனது கண்ணீரிலும் காதல் பூ பூக்கின்றதே
கண்மணியே உன்னால்..

நதியேதும் விரும்பாத பாலைவனமாக நான்
இருந்தேன், நீயோ மழையாக என் மீது
விழுந்து காதல் நதியாக என்னிடம் வந்தாய்...

நீ செல்லும் வழி எங்கும் இயற்கை அன்பை
என் மனதில் இதமாய் விதைத்துவிட்டு,
அறுவடை செய்யாமல் மறைந்தது ஏனோ...

அந்த அறுவடை செய்யாத அன்பினால்
இன்று, என் கண்ணீரிலும் காதல் பூ
பூக்கின்றதே கண்மணியே உன்னால்...

# மனதின் மீள்
# பதிவேற்றம்



மனதில் நிரந்தரமாக அழிக்கப்பட்ட
சில நினைவுகளை இங்கு நாம்
யாரும் மீள் பதிவேற்ற
நினைப்பதில்லை..

அதில் இருந்து நாம்
மீண்டுவிட்டோம் என்ற
நம்பிக்கையை நம் மனதில் நாம்
நிரந்தரமாக வைக்கும் வரை...

அதுவே அந்த நம்பிக்கை நம்மிடம்
குறைவடையும் போது அது
தானாகவே நம் மனதில் மீள்
பதிவேற்றம் செய்து கொண்டு
நமக்கு அது மீளா துயரத்தையே
துணையாக தந்துவிடும்...




# மூடிய புத்தகத்தின் பயம்

அனைவரும் பயன்படுத்தி தேவை முடிந்ததும் தூக்கி
எறிந்துவிட்டுச் சென்ற கவிதைப் புத்தகம் போல நான்...

பல ஆண்டுகள் யாரும் பயன்படுத்தாமல் எங்கோ ஓர்
ஓரமாக கிடந்த என்னை யாரோ ஒருவர் எடுத்து
பத்திரமாக புத்தக தட்டில் வைத்துவிட்டார்கள்...

மூடிய புத்தகமாக பயமில்லாமல் ஓர் ஓரமாக கிடந்த
நான் இப்போது என் அருகில் யாரும் நெருங்கிடும்
போது பயத்துடனே இங்கு இருக்கின்றேன்...

மீண்டும் என்னை எடுத்து வாசித்துவிட்டு அதன்
அர்த்தம் அறியாமலே என்னை எங்கோ தூக்கி
எறிந்துவிட்டு சென்றுவிடுவார்களோ என்ற பயத்துடனே
இங்கு வாழ்கின்றேன்...



# அமைதியான புத்தகம்

நூலகத்தில் இருக்கும் புத்தகங்கள்
அனைத்தும் நாள் தோறும்
வாசிக்கப்படுவதில்லை...

நாள்தோறும் வாசிக்கப்படும்
புத்தகத்தின் மதிப்பு நாள் தோறும்
குறைந்து கொண்டு தான்
இருக்கும்..

ஆனால் அங்கு யாராலும்
வாசிக்கப்படாமல் எங்கோ
ஓர்மூலையில் அமைதியாக
உறங்கும் புத்தகம் தான் என்றாவது
ஒரு நாள் அந்த நூலகத்தின்
வரலாற்றையே மாற்றிவிடும்...

அதுபோல தான் எப்போதும்
அமைதியாக இருக்கின்றார்கள்
என்று யாரையும்
ஒதுக்கிவிடாதீர்கள்...

அவர்களின் அமைதிக்கான
காரணம் சில சொல்ல முடியாத
வரலாறாக இருக்கலாம்....

அது என்றாவது ஒரு நாள் ஒரு
சிலரின் வாழ்கையையே
மாற்றிவிடும் என்பதில் கவனமாக
இருங்கள்....

# தனிமை வேண்டாம்

எந்த வண்ணங்களும் தனிமையில்
அழகாக தெரிவதில்லை...

காகிதத்தில் மை விழும் போது தான்
காகிதத்தின் அழகும் தேவையும்
புரியும்...

தாவரத்தில் பூ பூக்கும் போது தான்
அதன் ஈர்ப்பும் அழகும் கூடும்...

நீல வானத்தில் மேகங்கள் கூடும் போது
தான் அதன் நிழல் கூட மண்ணில்
அழகாக ஓடும்...

அதுபோல தான் தனிமை எப்போதும்
அழகில்லை என்பதை நமக்கான உறவு
கிடைக்கும் போது நம் வாழ்க்கை
நமக்கு உணர்த்தும்...

# தபால்பெட்டி கடிதமும் மனிதனின் மனமும்

பலநூறு கடிதங்கள் தேங்கிய ஒற்றை
தபால்பெட்டி காத்திருக்கின்றது நாள் தோறும்
தன்னிடம் வந்து கடிதங்களை
எடுத்துச்செல்லும் தபால்காரனுக்காக...

தபால்காரனிடம் இருக்கும் அந்த கடிதங்கள்
யாவும் காத்திருக்கின்றது ஒவ்வொரு
மனங்களிலும் உள்ள இன்ப துன்பங்களை
உரியவரிடம் உரிமையுடன் கூறுவதற்காக...

தபால்பெட்டி போல் தான் இங்கு மனிதர்களின்
மனதிலும் பல நூறு இன்ப துன்பங்கள்
நிறைந்த கடிதங்கள் எழுதப்பட்டு பல
நாட்களாக தேங்கிக்கிடக்கின்றது....

அவை அனைத்தையும் உரிமையுடன்
எடுத்துச்சென்று வாசிக்கும் ஓர் உறவை
தேடியே இந்த மனிதர்களின் மனங்களில்
தேங்கியகடிதங்கள் உரிமைக்காக
காத்திருக்கின்றன...



# என் கற்பனை காரிகை அவள்



அகன்ற நெற்றி கொண்ட காரிகையே
அதை அனுதினமும் மறைக்காதே..

மறைந்திருக்கும் உன் நெற்றியின்
அழகை காணவே காத்திருக்கும் உன்
வீட்டு கண்ணாடியே...

கருவிழி இமையின் கருமையே அதை
அனுதினமும் தீட்டாதே..

தீட்டிடும் உன் கருவிழியின் கருமை
கண்டு ஒளிந்து கொள்ள விரும்பிடும்
நிறம் அது கருமையே...


மூக்குத்திபூ அழகின் பூவையே அதை
அனுதினமும் அசைக்காதே..

அசைந்திடும் உன் மூக்குத்திபூ கண்டு
அசைந்திடும் உன் வீட்டு பூக்கள்
எல்லாம் அசையாமல் நிற்கின்றதே...

இதழ் நிறத்தின் இளம்பிடியே அதை
அனுதினமும் கூட்டாதே...

கூடிய உன் இதழ் நிறம் கண்டு
கண்களும் வண்ணங்கள்
அறிந்திடாமல் தவிக்கின்றதே...

# திருமணம்



நீ எனக்கு நான் உனக்கு

நீ எனக்கு - அறிமுகமும் இல்லை
எந்தன் அதிசயமும் நீ இல்லை

நான் உனக்கு - அழகானவனும்
இல்லை உந்தன் அன்பானவனும்
இல்லை

நீ எனக்கு - ஏற்றவளும் இல்லை
எந்தன் எதிர்பார்ப்பும் நீ இல்லை

நான் உனக்கு -
துணையானவனும் இல்லை
உந்தன் இணையானவனும்
இல்லை

நீ எனக்கு - கடந்தகாலமும் இல்லை
எந்தன் எதிர்காலமும் இல்லை

இருந்தும் நீ எனக்கு நான் உனக்கு
எனும் நிகழ்காலத்தில் இன்று
நாம்....



# தொலைபேசி

என் அதிகாலைகள் எல்லாம்
உன் முகம் தேடியே
விடியலாகின்றது..

நண்பகல்கள் எல்லாம் உன்
குரல் இசையும்
குறுஞ்செய்தியுமே எந்தன்
நாட்களின் என்
நண்பர்களாகியே என் நேரம்
நகர்கின்றது..

இரவுகளின் இருள்களில்
எல்லாம் என் முகம் மட்டுமே
வெளிச்சத்தின்
வெண்மையாகின்றது...

காரணம் நான் அறிந்தேன்
கயவனே அது நீ தான் என்று



# புகைப்படம்

என் காதலி அவள் என்னைவிட்டு ஒரு
நொடியும் அவள் பிரிந்ததே இல்லை..

நான் பேசுவதை நாள் முழுவதும் கேட்கும்
அவள் என்னை எதிர்த்து ஒரு வார்த்தையும்
ஒருபோதும் பேசியதே இல்லை..

எப்போதும் நான் அவளை என் கைகளில்
அணைத்து பார்க்கும் போது என்னை
மட்டுமே பார்க்கும் அவள் நான் பார்க்காத
நேரத்திலும் கூட என்னை பார்க்காமல்
இருந்ததே இல்லை..

என்னுள்ளே இருந்து என்னை அமைதியாக
ஆட்சி செய்யும் அவள் நிஜமாக என்னுடன்
இல்லை நிழல்படமாகவே என்னுடன்
இருக்கின்றாள்...



# கடிகாரமும் நானும்

என் வீட்டின் கடிகாரத்தின் அசைவுகள்
எல்லாம் இன்பமாய் நகர்கின்றது
அவளின் நினைவுகளால்...

இடைவெளி இருப்பதினால் தான் அது
நின்றுபோகாமல் நகர்கின்றது பலமுறை
சுற்றியே அவள் என் அருகில்
நெருங்கினாலும் இடைவெளி இருப்பதால்
தான் நான் நாள்தோரும்
இயங்குகின்றேன்...

நள்ளிரவுகளின் நிதானத்தில் துடிக்கும்
உன் இசைகேட்கவே நான் கண்
விழித்துக் காத்திருந்தேன்
என்னைப்போல் நீயும் துடிக்கின்றாய்
என்பதை அறிந்த பிறகே இங்கு
நாள்தோறும் நான் உறங்குகின்றேன்...

# நீயும் நானும் நடந்திடவே



நெடுஞ்சாலையும் இன்று உன்னுடன் நான்
நடக்கையில் வளைவுகளில் நாம் மறைந்திட
வேண்டாம் என்றெண்ணியே..! அது
வளைவுகள் இன்றியே நீள்கின்றது....

மரங்களும் இன்று நாம் சந்திக்கும்
வேளையில் இலை உதிர்காலம்
என்றெண்ணியே..! தன் இலைகளை எல்லாம்
மழையாக நம்மீது பொழிகின்றது...

காற்றும் இன்று உன் அருகில் நான்
இருந்திடவே உன்மீது மோதிட முடியாமல்
இன்று என் அனுமதி கேட்டே தவிக்கின்றது...

சூரியனும் இன்று நீயும் நானும் நடந்திடவே
நம் பயணம் முடிந்திட வேண்டாம்
என்றெண்ணியே..! அது மழை மேகம்
தேடியே ஒளிந்து கொள்கின்றது..

# மைவிழியே

மயில்விழியே
கயல்விழியே
உந்தன் மைவிழி கொஞ்சம்
அசைந்த அந்நேரம் மையம்
கொண்டதடி என் பார்வை
உன்னில்...

மையம் கொண்ட என் பார்வை
சற்று நகர்ந்திடவே உன்
அசைந்த விழிகள் திசை எங்கும்
சுழல்கின்றதே...

மயில்த்தோகை இறகு ஒன்று
உன் மைவிழி மறைத்த
கணமே.! உந்தன் மைவிழியும்
மயில்விழியாகிட எந்தன்
மனமெங்கும் நீ நுழைந்தாயடி
என் கயல்விழியே...



# சுவாசிக்க தவிக்காதே



இயற்கையை அழிக்கும் மனிதா..!
இளமையை தொலைத்துவிட்டு
இயலாமையை வளர்த்துவிட்டு எதை
நீ தேடுகின்றாய்.?

புதுமையை தேடுகின்றாய்
பழைமையை மூடுகின்றாய்
மீண்டும் இழந்ததை எண்ணியே நீ
வாடுகின்றாய்..

மரம் வளர்த்திடவே மறுக்கின்றாய்
மழைக்காக ஏங்கியே நீ
தவிக்கின்றாய் காடுகளை நீ
அழிக்கின்றாய் காற்றை ஏன்
தடுக்கின்றாய்...

சுயநலமாக ஏன் இங்கு நீ
சிந்திக்கின்றாய்
இனி இந்த உலகில் நீ சுவாசிக்க
தவிக்கவே என்னுகின்றாய்...

# இராவணன் காதல்



இருள் சூழ்ந்த இந்த உலகத்தில்
ஒளியாக வந்த சூரியவம்சம் நீ உன்
மீது நான் கொண்ட ஆசையால் இந்த
உலகத்தின் ஒளியை சுயநலமாக
சிறைப்பிடித்தவன் ஆகிப்போனேன்...

சிறைப்பிடித்தும் உன்அருகில் நான்
நெருங்கிடவில்லை நெருங்கிடவும்
தோன்றவில்லை உன்
அனுமதியின்றி உன்னை
தீண்டிடவும் இல்லை தீண்டிட
தோன்றவும் இல்லை...

காரணம் உன்மேல் நான்
கொண்டது ஆசையல்ல காதல்
என்பதை உன்னை சிறைப்பிடித்த
கணமே உன் கலங்கிய கண்களில்
நான் அதை உணர்ந்தேனடி....



# ஆயுள் கைதியை தேடும் கண்கள்

கண்களுக்கு கைது செய்யும் அதிகாரத்தை
யார் கொடுத்தது...

சிறை செய்யும் கண்களுக்கு ஆயுள் கைதி யார்
என்று தெரிந்து கைது செய்ய
தெரியவில்லையே....

தெரியாமல் கைது செய்த குற்றத்திற்க்காக
என்னை நீ குற்றவாளியாக்கிட பொய் சாட்சி
சொல்லிவிட்டு...

இப்போது குற்றம் செய்யாமலே தண்டனை
கிடைத்த நான் இங்கு விடுதலைக்காக ஏங்கும்
போது குற்றவாளியே நீதிபதியாகிடும் போது
விடுதலைகிடைத்திடுமா...?எனக்கு

இப்படிக்கு...
ஆயுள் கைதி யார் என்று தெரிந்தும் சிறை
செய்ய முடியாமல் விடுதலைக்காக தவிக்கும்
சுற்றவாளி..



# மீண்டும் கண்கள் பாலைவனமாகிட வேண்டும்

உன் நிறம்கண்டு நிறமேறிப்போனதடி
என் கண்கள்...கருவிழியே

அரபு தேசத்தின் பாலைவனமாக
இருந்த என் கண்களில் நதியாக
பாய்கின்றது உன் நினைவுகள்...

அந்த நினைவுகளின் நதியில் இருந்து
சிதறியதுளிகளில் உதித்த உறவுகளின்
நிழலில் இன்று ஓய்வெடுக்கின்றது என்
இதயம்...

என்றாவது ஒரு நாள் ஓய்வெடுக்கும்
என் இதயம் ஓய்ந்திடாமல் ஓடும்..

அன்று மீண்டும் நதிகள் இல்லாத
பாலைவனமாக மாறிவிடும் என்
கண்கள்....

# நிழலும் உதவிடும்

வலிகளையும் காயங்களையும்
சுமந்துகொண்டு பறந்து வரும்
பறவைகளில் ஒன்று நிழல்
தேடுகின்றபோது...

அப்போது நிழல் தரும் மரமோ
பறவையிடம் இப்போது இலை
உதிர்காலம் என்று சொல்லி
அசைகின்றது...

பறவையோ மரத்திடம் கூறிச் செல்கின்றது
உன் உதிர்ந்த இலைகளும் சிறு
உயிர்களுக்கும் சருகாக
நிழல்தருகின்றதே! அதை நீ
அறிவாயா?என்று...

நம்மிடம் உதவி செய்யும் உள்ளம்
இருந்தாலே போதும் நம் நிழல் கூட
நம்மை அறியாமலே உதவி
செய்துவிடும்....



# காத்திருப்பவர்கள்


## இகழ்ந்திடுவார்கள் புகழ்ந்திடுவார்கள்

அதிகாலையில் மறைந்திருந்து
பார்த்துவிட்டு வரும் உன் அழகை
காண வேண்டும் என்று
தொடுவானத்தைப்பார்த்து
காத்திருப்பவர்கள்....

நடுவானில் உன்னை கண்டவுடன்
உன் இயல்பை கூறியே உன்னை
இகழ்ந்திடுவார்கள்....

இகழ்ந்ததை எண்ணியே நீ
மாலையில் மறைந்திடும் பொழுதில்
மலைகளின் நடுவில் உன்னை
கண்டதும் உன் அழகை
புகழ்ந்திடுவார்கள்...

இவர்கள் உன்னை மட்டும் இப்படி
விமர்சிக்கிறார்கள்  என்று
எண்ணிவிடாதே.! மனிதர்களிடமும்
இவர்கள் இப்படிதான்....



# விஞ்ஞான காதல்

ஊடலை கண்களால் பகிரலை
செய்தாய் உன் இதயத்தை..

இயங்கலையில் நீ வந்து முடக்கலை
செய்தாய் என் ஏக்கத்தை..

புலனத்தில் நிதம் வந்து என்
வன்தட்டு மனம் அதை வருடியால்
உன் சுயஉரு பதித்தாய்...

தினமும் உன்னை அருகலையின்
உதவியால் திறன்பேசியால்
தேடுகிறேன்..

உன்னை எப்போது என் கண்களால்
திரைப் பிடிப்பு செய்வேன் என்று...

Bluetooth - ஊடலை
Hotspot - பகிரலை
Online - இயங்கலை
Offline - முடக்கலை
WhatsApp - புலனம்
Hard disk - வன்தட்டு
Scanner - வருடி
Selfie - சுயஉரு
WiFi - அருகலை
Smart phone - திறன்பேசி
Print screen - திரைப்பிடிப்பு

# இறுதி முத்தம்



இதயத்தில் என் நினைவுகளை சுமந்து
கொண்டு மனதில் உறுதியுடன்
போராடி வென்றுவா அன்பே...

உன் காயங்களுக்காக இங்கு நான்
கண்ணீர் வடிப்பேன் நீ
கவலையில்லாமல் கடந்திடு..

என்னைவிட உன் நேசம் உனது
தேசம் என்பதை நான் அறிவேன்
எனக்காக நீ தயங்காதே..

ஆனால் என் தேசம் நீயாகின்றாய்
அன்பே இன்று என் முத்தமும் அச்சம்
கொள்கின்றது இது என் இதழ்களின்
இறுதி முத்தமாகிவிடுமோ? என்று...

# ஏழை கொப்பி

ஒற்றைக் கொப்பியில் தான் பல
பாடங்கள் படித்தேன்
மதிப்பெண் இருந்தும்
மதிப்பில்லாமலே இருந்தேன் நான்
பள்ளியிலே..

அந்த ஒற்றைக் கொப்பிக்கும்
விடுதலை நாள் நெருங்கிடவே
இனி விடை ஏதும் தெரியாமலே நான்
அழுது நின்றேன் என்
அன்னையிடமே..

இறுதியில் என்னிடத்தில்
வெற்றியடைந்து விடுதலைப் பெற்ற
கொப்பி என்னைப் பார்த்து
சிரித்திடவே..!
அன்று தான் தோற்றுப்போய் விலகி
நின்றேன்
என் கல்வியிலே..






# கற்பு

காதலில் ஆரம்பித்து காமத்தில்
முடிவதில்லை கற்பு..

இணைவதில் துவங்கி இன்பத்தில்
முடிவதில்லை கற்பு..

ஓர் இரவு போனதும் முதல் இரவில்
முடிவதில்லை கற்பு..

கருவறை சென்ற உயிர்
கரைந்துபோனதால் முடிவதில்லை
கற்பு..

கற்பு என்பது யாதெனில்

அது ஆணுக்கும்
பெண்ணுக்குமானது அது
உண்மையான அன்பின்
நம்பிக்கையிலே என்றும் நிலையாக
உள்ளது...

# உறவு வேர்கள்

இலையுதிர் காலம் அறிந்த மரங்கள்
இலைகள் எல்லாம் உதிர்ந்துவிட்டதை
நினைத்து வாடிப்போவதில்லை...

பருவகால மழையை எதிர்பார்த்து
காத்திருந்து மரங்கள் மீண்டும் துளிர்விட
காத்திருக்கும்..

பருவகால மழையோ மரங்களை
ஏமாற்றிச் சென்றாலும் வேர்கள் அதை
மரங்களுக்கு சொல்வதில்லை..

தன் கவலைகளையும் கஷ்டங்களையும்
மறைத்து மீண்டும் மரங்கள் துளிர்விட
துணையாக நிற்கும்...

அதுபோல தான் சில உறவுகளும்
வேர்களாக நம்முடன் இருந்துகொண்டு
அவர்களின் துன்பங்களை எல்லாம்
நம்மிடம் மறைத்துவிட்டு நம்
கஸ்டங்களில் எப்போதும் நமக்கு
துணையாக நிற்கின்றார்கள்...



# நடுங்கி துடிக்கும் இருதயம்



வாழ்க்கைப் பாதை பயணத்தில் பல
தடைகள் கடந்து பயணம்
செய்கின்றேன்...

தடுமாறிய இடங்களை எல்லாம்
விழாமல் கடந்திருக்கின்றேன் ஓர் முறை
விழுந்த இடத்தை மீண்டும் கடந்திடும்
முயற்சியில் நான்...

தடுமாறி விழுந்த இடத்தின் அருகே
மீண்டும் நெருங்கிடும் போது வலியும்
காயமும் கூட நினைவில் இல்லை...

அதன் அருகில் நெருங்கிடும் போது என்
இருதயம் மட்டும் பயத்தில் நடுங்கித்
துடிப்பதை உணர்கின்றேன்...

நடுங்கிடும் இருதயம் நடுநிலை
அடைந்திடும் நேரம் வேண்டும்
தடுமாறிய இடத்தை என் இருதயம்
நடுங்காமல் கடந்திடும் காலம்
வேண்டும்...

கவிதைக்காரன் நான்

# மயங்கியே மாய்கின்றேன்




மயங்கியே மாய்கின்றது என்
விழிகள் முழுமதியே உன் முகம்
பார்த்து...

தயங்கியே நீள்கின்றது என் நாட்கள்
கயல்விழியே உன் கண் பார்த்து...

தேங்கியே நிறைகின்றது என்
ஆசைகள் தேவதையே உன் இதயம்
பார்த்து...

சுற்றியே சுழல்கின்றது என் அன்பு
சுந்தரியே உன் சுருல் கூந்தல்
அழகைப் பார்த்து..

ஏங்கியே தவிக்கின்றது என் மனம்
வஞ்சனியே உன் வருகையை
எதிர்பார்த்து...

# நீயும் நானும்



காரணம் இல்லாத கவிதை நீ

நான் கற்றுக்கொள்ள விரும்பும்
புத்தகமும் நீ...

பாடல் கேட்கும் பதுமை நீ

நான் பாடிடவே விரும்பும் என் ஆசை
பாடலும் நீ...

கதை கேட்கும் குழந்தை நீ

நான் வாழும் என் கதையில் என்
அன்பு குழந்தையும் நீ..

அன்பை கேட்கும் இதயம் நீ


நான் தேடும் அன்பை வரமாக பெற்ற
என் அன்பின் இருதயமும் நீ...

# என் அன்பு பனித்துளியே.!

உன்மேல் நான் கொண்ட ஆசையின்
வெப்பத்தில் எனக்காக உருகியவள் நீயடி...

உருகிய நீ நீராக மாறியே என் தாகம்
தீர்த்திடாமல் கானல் நீராக மாறியே
மறைந்தது ஏனடி...

கானல் நீராக நீ இருக்கவே என்
ஆசையின் வெப்பத்தில் இன்று
கண்ணீரும் வெந்நீராக மாறியே என்
விழிகள் ஓரம் வழிகின்றதே உன்னால்...



# ஆசை பயணம்

தொலைதூர பயணம் வேண்டும் அதில் நீயும்
நானும் இணைந்திட வேண்டும் தொடுவானம்
நெருங்கிட வேண்டும் நீ என் தோள்மீது
சாய்ந்திட வேண்டும்...

வானவில்லை வாங்கிட வேண்டும் உன்
வெட்கத்தின் வண்ணத்தை அதில் இணைத்திட
வேண்டும்...

சாலை ஓர தேனீர் வேண்டும் அதை எனக்காக நீ
வாங்கிட வேண்டும்
விரும்பிய இடமெங்கும் தங்கிட வேண்டும்
அங்கே உனக்காக என் நேரம் நகர்ந்திட
வேண்டும்...

இயற்கை எல்லாம் நம் இமைகளுக்குள் இடம்
பிடித்திட வேண்டும் அங்கே உன்னுடன்
சேர்ந்தே என்றும் நான் வாழ்ந்திட வேண்டும்...



# வாழ்க்கை கனவு

கனவில் வரும் இன்ப துன்பங்கள்
விடிந்ததும் காணாமல் போவதைப்
போல் ஒரு வாழ்க்கை வாழ்ந்திட
வேண்டும்...



பறவைகளும் விலங்குகளையும்
போல பணமில்லாத ஓர் உலகம்
வேண்டும்...

அதில் எதையும் எதிர்பார்திடாமல்
எப்போதும் வீசும் காற்றைப்போல் ஓர்
உறவு வேண்டும்...

காயங்கள் கண்டதும் கலங்கிடும்
கண்கள் போல கஷ்டங்கள் வந்ததும்
எனக்காக கலங்கிடும் நெஞ்சங்கள்
வேண்டும்...

எப்போதும் தன் இயல்பை மாற்றிடாத
எரிமலையாக மனதிற்குள் எப்போதும்
ஓர் கொள்கை வேண்டும்..

# குடிசையும் கோபுரமும்

என் அன்பில் உருகிவீழ்ந்த
நிலவின் ஒற்றைத்துளி நீயடி...

ஆசைகள் ஏதும் இன்றியே வந்து
வீழ்ந்தாய் நீ என் குடிசையிலே...

வீழ்ந்த உன்னை தாங்கிடும்
ஆசையில் என் ஆயுள்
முழுவதையும் உனக்காக
இழந்திட துணிந்தவன் நானடி...

ஆனால் நீயோ கோபுரம் என்று
எண்ணியே என் குடிசையின்
மீது வந்து வீழ்ந்திருக்கின்றாய்...

அதனால் தான் இங்கு நாள்
தோறும் உன்னாலே நான் பற்றி
எரிகின்றேன் பாரடி...





# கரைந்து போகின்றேன் நான்

கடற்கரை மணலினில் நீ வரைந்த காதல்
ஓவியம் நான்...

பெரும் அலை ஒன்று வந்தால் எல்லாம்
அழிந்துவிடும் என்று அறிந்தே நீ என்னை
கடற்கரை மணல் ஓவியமாக வரைந்துவிட்டு
போனாய்...

நீ வரைந்த ஓவியத்தில் என் உண்மை
அன்பின் ஈரம் காய்ந்துபோகவில்லை பெரும்
அலைவந்தும் அது கரைந்துபோகவில்லை...

பெரும் அலைகளின் தோல்வியை கண்ட கடல்
வந்து என்னிடம் கேட்கின்றது உன்
உண்மையான அன்பிற்கு தகுதி
இல்லாதவளுக்காய் இன்னும் ஏன் நீ நிமிர்ந்து
நிற்கின்றாய் கரைந்துபோய்விடு என்று....

# மௌன மொழியே


விழிமூடி காத்திருந்த கனவுகளில்
சிக்கித்தவித்தவனுக்கு விழித்திருந்த
போது கிடைத்த கனவாக அவள்...

அவள் விழிகள் என்னிடம் பேசியதை
கனவிலும் மறக்காதவன் நான் இன்று
அவள் பேசிய மொழிகளில்
என்னையே நான்
மறந்துபோனேன்...

அவள் பேசிய மொழிகளை தேடிய
உலகமும் இன்று அவள்
மொழியறியாமலே
தோற்றுப்போனதை கண்டதும்
வியந்துபோனேன்...

மௌனமொழியே உன் மனதின்
மொழிகள் அறிந்தவள் நீ மட்டுமே
இருந்தும் நீ பேசிய மௌனமொழிகள்
அறிந்திடும் ஆசையில் இங்கு நான்
மட்டுமே தவிக்கின்றேன் பாரடி...





# என் அருகில் நீ இருந்தால்

என் அருகில் நீ இருந்தால் குளிரூட்டும்
இரவுகளும் உன் வருகைக்காக உறைந்து
நிற்கும்..

இரவுகளின் இருள் கூட சற்று தயங்கி நின்று
வேடிக்கை பார்க்கும்..

வார்த்தைகளின் மௌனம் சற்று மறைந்திருந்து
விழிகளின் மொழி அறிந்திட முயற்சி செய்யும்..

உன் நெருக்கம் அதிகரிக்கும் நேரத்தில்
நெருப்பும் பனிக்காற்றாக என் மீது
படர்ந்துவிடும்...



# இயற்கையின் ஏமாற்றம் அழகு

மேகத்தை ஏமாற்றி மண்ணை வந்து சேர்ந்தது
மழைதுளி ஒன்று..

அது மண்ணில் புதைந்த விதை ஒன்றிடம்
தஞ்சமாகியது...

விதையோ இன்று மண்ணை ஏமாற்றி
மரமாகியது..

மரமோ
மழைத்துளியை மீண்டும் சந்திக்க
எண்ணியதும் மேகத்தை தீண்ட காற்றிடம்
கதைக்கின்றது..

காற்றோ அந்த மரத்தை ஏமாற்றிவிட்டு
பருவக்காற்றாகிவிட வானத்தை ஏமாற்றிவிட்டு
மேகமும் கலைகின்றது...



# மண்ணில் விழுந்த பூ

மண்ணில் விழுந்த பூ ஒன்று இன்று காற்றில்
நகர கண்டேன்...

நகரும் பூவின் வண்ணங்கள் நிலத்தில்
பரவியதை கண்டேன்..

தன்னுடைய வண்ணங்களை எல்லாம் இழந்த
அந்த வெள்ளை பூ சொன்னது நான் என்
அழகினை இழந்துவிட்டேன் என்று..

பூவே உன் உண்மை அழகு இது தான் இந்த
உலகத்திற்காக உன் எண்ணங்ளையும்
வண்ணங்களையும் மாற்றிக்கொள்ளாதே..

என்றாவது ஒரு நாள்
இந்த உலகத்தின் சாயம் வெளுத்துப்போகலாம்
அன்று உன் உன்னை அழகு இந்த
உலகத்திற்கு தெரியும்...

# யார் அவளோ?



என் இமைகளின் இடைவெளியை
அதிகரிக்கச் செய்திட வருபவள்...

என் இதயத்தின் ஓசை கேட்க என்
மார்பில் இதமாய் சாய்ந்திட
நினைப்பவள்...

என்அருகில் இருந்து தன் ஐவிரல்
கொண்டு என் தலைமுடி கோதிட
துடிப்பவள்...

கோபத்தில் நான் பேசிடும்
வார்த்தைகளை தனிக்கை செய்து
செல்ல சண்டைக்காக
எதிர்பார்த்திருப்பவள்...

ஒற்றை கடிகாரத்தை நாள்தோறும்
பார்த்துக்கொண்டு என் வருகையை
எதிர்பார்த்து வாசலையே
பார்த்திருப்பவள்...

என்னை தோற்கடிக்கும் அன்பை
எனக்கான பரிசாக கொடுத்திடவே
எனக்காக சுமக்க காத்திருப்பவள் யார்
அவளோ?தெரியவில்லை...



# நன்றியுரை

கறைபடாத காகிதம் விலை பேசி தீர்க்கப்பட்டது
கறைப்பட்ட காகிதம் விலை மதிப்பற்ற பொக்கிஷமாகியது

அந்த பொக்கிஷத்தை இன்று நான் உருவாக்க உழைத்த அனைத்து உள்ளங்களுக்கும் என் உள்ளம் நிறைந்த நன்றிகள்

குறிப்பாக இந்த நூலை நான் உருவாக்க வேண்டும் என்ற என் நம்பிக்கையை எப்போதும் என் மனதில் விதைத்த அன்பு உள்ளங்களுக்கும் எனது கவிதைக்காரன் நான் முகநூல் குழு நண்பர்களுக்கும் ரசிகர்களுக்கும் எனது நன்றிகள் மற்றும் குறிப்பாக எனது இந்த புத்தகத்தை மிகவும் அழகாக வடிவமைத்து அனைத்து உதவிகளையும் செய்து வழங்கிய ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பணிப்பாளருமான ஜே.எம்.பாஸித் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்...

**நன்றி**

**என்றும் அன்புடன்..**

**சி.சாள்ஸ் அன்டனி**

**வலைப்பாடு**

வெளியீடு:
துணிந்தெழு
ISBN – 978-624-98348-0-4
9 786249 834804